திருவண்ணாமலை

தூய்மை அருணைப் பணிகள் - அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

கால்வாய் ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்தரவு!

திருவண்ணாமலை, பிப்.11

திருவண்ணாமலையில் வாரந்தோறும் நடைபெறும் தூய்மை அருணை பணிகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பார்வையிட்டு ஆய்வு செய்தார். கால்வாய் ஆக்கிரமிப்புகளை அகற்றிட உத்தரவிட்டார்.

திருவண்ணாமலையில் தொண்டு செய்வோம், துணை நிற்போம் என்ற முழக்கத்தோடு கடந்த 7 ஆண்டுகளாக பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களை அமைப்பாளராகக் கொண்டு, தூய்மை அருணை திட்டம் செயல்பட்டு வருகிறது. தூய்மை அருணை திட்டத்திற்கு 4 மேற்பார்வையாளர்களும், 39 வார்டுக்கு 39 ஒருங்கிணைப்பாளர்களும், மாட வீதி தூய்மைப் பணிக்கு 7 ஒருங்கிணைப்பாளர்களும் ஒவ்வொரு வார்டுக்கும் 25 தூய்மைக் காவலர்கள் என ஆயிரக்கணக்கானோர் மரம் நடுதல், பராமரித்தல், கால்வாய் மற்றும் தூர்வாருதல் என செயல்பட்டு வருகின்றனர்.

கிரிவலப்பாதையில் உள்ள 20 குளங்களை தூய்மை அருணை அமைப்பு மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் சீரமைப்பது என தீர்மானிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

09.02.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 7.00 மணிக்கு, திருவண்ணாமலை நகரில் நடைபெறும் தூய்மைப் பணிகள், நடப்பட்ட மரக்கன்றுகளை பராமரிக்கும் பணி ஆகியவற்றை பொதுப்பணித் துறை அமைச்சரும், தூய்மை அருணையின் அமைப்பாளருமான எ.வ.வேலு பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

காலை 7.00 மணிக்கு திருக்கோயிலூர் ரோடு, ஆண்கள் மேல்நிலைப்பள்ளியை சுற்றியுள்ளப் பகுதிகளில் கால்வாய் அடைப்பு, மரக் கன்றுகள் பராமரிப்பதை பார்வையிட்டு, பொதுப்பணித்துறை அமைச்சர் பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்கினார்.

காலை 7.15 மணிக்கு, வார்டு எண்.38 ஆடுதொட்டித் தெருவில் நடைபெற்று வரும் கால்வாய் அடைப்பு, மண்மேடு அகற்றுதல்,

காலை 7.30 மணிக்கு, வார்டு எண்.36 கல் நகர் பகுதியில் மண்மேடுகள் மற்றும் கால்வாய் தூர்வாரும் பணியினை பார்வையிட்டும்,

காலை 7.45 மணிக்கு, வார்டு எண்.37 கோபால் தெருவில் நடைபெறும் தூய்மைப் பணிகள்,

காலை 8.00 மணிக்கு, வார்டு எண்.17 இராமலிங்கனார் மெயின் தெருவில் நடைபெறும் கால்வாய் அடைப்பு புதர்மேடுகளை அகற்றுதல்,

காலை 8.15 மணிக்கு, வார்டு எண்.12 கட்டபொம்மன் தெருவில் நடைபெற்று வரும் கால்வாய் தூர்வாரும் பணி,

காலை 8.30 மணிக்கு, வார்டு எண்.11 கார்கானாத் தெரு பகுதியில் நடைபெறும் கால்வாய் தூர்வாரும் பணியும், மரக்கன்றுகளை பராமரிக்கும் பணியினையும் பார்வையிட்டு, பொதுப்பணித்துறை அமைச்சரும், அமைப்பாளருமான எ.வ.வேலு ஆலோசனைகளை வழங்கினார். ஆய்வின்போது கால்வாய் ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றிட அலுவலர்களுக்கு உத்திரவிட்டார்.

தூய்மைப் பணியில் தூய்மை அருணையின் மேற்பார்வையாளர்கள் டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என். அண்ணாதுரை.எம்.பி., இரா. ஸ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், ப்ரியா ப.விஜயரங்கன், ஒருங்கிணைப்பாளர்கள் அ.கோவிந்தன், செ.எழில்மாறன், எஸ்.கண்ணதாசன், ஏ.ஏ.ஆறுமுகம், ம.வினோத்குமார், எஸ். கே.டி.வீரா, வழக்கறிஞர்கள் ம.செந்தில், கிருஷ்ணமூர்த்தி, பா.அரிகிருஷ்ணன், சு.ராஜாங்கம், வழக்கறிஞர் ந.சீனுவாசன், இரா.அருண், மெட்ராஸ் கே.சுப்பிரமணி, காலேஜ் கு.ரவி, கே.காளிதாஸ், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பி.ஆர்.நாகராஜ், கு.குமார், மண்டி.பிரகாஷ், மு.கருணாமூர்த்தி, இரா.ராஜாமணி, அ.திவாகர், அ.பழனி, கே.பிரகாஷ், பி.ஜி. முருகன், கோபி.சங்கர், சென்னை.சுரேஷ், முபாரக், லயன்.ஷெரீப். கா.ஏழுமலை, எஸ்.ஜாகீர், இரா.ஜோதி, கு.தியாகு, மூ.காமேஷ், ஹக்கிம்சேட், சி.கே.சசிக்குமார், கோல்டு.எஸ்.பிரபு மற்றும் மாட வீதி ஒருங்கிணைப்பாளர்கள் இல.குணசேகரன், சினம்.பெருமாள், ஆர்.கே.பி. பாஸ்கர், ஜீவரேகா விஜயராஜ், அருணை.வெங்கட் உட்பட ஆயிரக்கணக்கான தூய்மைக் காவலர்களும் கலந்து கொண்டனர்.

தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–3 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெறுகிறது. முதல் கட்டமாக இராணிப்பேட்டை மற்றும் காஞ்சிபுரம் வடக்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

நாள்	நேரம்	கழக மாவட்டம்	இடம்
11.02.2025 செவ்வாய்க்கிழமை	மாலை 4.00 மணி	இராணிப்பேட்டை	எஸ்.கே. மஹால், இராணிப்பேட்டை
12.02.2025 புதன்கிழமை	காலை 9.00 மணி	காஞ்சிபுரம் வடக்கு	திருமுருகன் பேலஸ் திருமண மண்டபம், குன்றத்தூர் மாங்காடு சாலை, சிக்கராயபுரம், காஞ்சிபுரம்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 09-02-2025

தமிழ்நாட்டில் கீழடி – சிவகளை – ஆதிச்சநல்லூர் உள்ளிட்ட 20 இடங்களில்

அகழ்வாராய்ச்சிகளை நடத்த ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாநிலங்களவையில் – இரா.கிரிராஜன் கேள்வி!

புதுடெல்லி, பிப். 11 -

தமிழ்நாட்டில் கடந்த 5 ஆண்டுகளில் கீழடி, சிவகளை, ஆதிச்சநல்லூர் உள்ளிட்ட 20 இடங்களில் அகழ்வாராய்ச்சிகள் நடத்த ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்க. என்ன என்று, கழக மாநிலங்களவை உறுப்பினர் இரா.கிரிராஜன் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அரசின் கலாச்சாரத் துறை பதிலளித்துள்ளது.

தமிழ் கலாச்சாரம் 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையானது என்பதை ஒன்றிய அரசு அறிந்துள்ளதா, தொன்மையான தமிழர் நாகரிகத்தின் எச்சங்களை வெளிக்கொணர்வ தற்கான அகழ்வாராய்ச்சிகளை நடத்த என்ன நடவடிக்கைகளை முனைப்புடன் எடுத்துள்ளது என ஒன்றிய அரசின் கலாச்சாரத் துறை அமைச்சரிடம், திமுக எம்.பி. இரா. கிரிராஜன் கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷேகாவத், இந்திய தொல்லியல் துறை, தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை ஆகியவற்றால் நடத்தப்பட்ட பல்வேறு அகழ்வாராய்ச்சிகள் மற்றும் ஆய்வுகள் மூலம் தமிழ்நாட்டில் உள்ள தொல்பொருள் சான்றுகள் வெளிச்சத்திற்கு வந்துள்ளதைக் கூறி, கடந்த 5 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின் விவரங்களை வழங்கியுள்ளார்.

அதன்படி 2020 முதல் 2024ஆம் ஆண்டு வரை திருவள்ளூர் மாவட்டம் சென்றாம்பாளையம், சிவகங்கை மாவட்டம் கீழடி, தூத்துக்குடி மாவட்டம் சிவகளை, ஆதிச்சநல்லூர், கொற்கை, ஈரோடு மாவட்டம் கொடுமணல் உள்ளிட்ட 20 இடங்களில் அகழ்வாராய்ச்சி பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக பதிலளிக்கப்பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரை கீழடியில் இந்திய தொல்லியல் துறையால் தொடங்கப்பட்ட அகழாய்வு பணிகள், 2020ஆம் ஆண்டு முதல் தற்போது வரை தமிழ்நாடு அரசின் மாநில தொல்லியல் துறையால் தொடர்ந்து நடத்தப்பட்டுவருவதாகவும் பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேபோல, மாநில தொல்லியல் துறையால் 2020ஆம் ஆண்டில் ஈரோடு மாவட்டம் கொடுமணல் பகுதியிலும், 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் கிருஷ்ணகிரி மாவட்டம் மயிலாடும்பாறை பகுதியிலும் அகழாய்வுப் பணிகள் நடைபெற்றதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

'தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசை கண்டித்து' திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மடத்துக்குளத்தில் மாவட்டச் செயலாளர் இல. பத்மநாபன் தலைமையில் கிழக்கு ஒன்றிய செயலாளர் எம்.ஏ.சாகுல் அமீது வரவேற்புரையில் நடைபெற்ற மாபெரும் கண்டன பொதுக் கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், தலைமைக் கழக பேச்சாளர்கள் கோவை வில்லாளன், அணவயல் கணேசன் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். இதில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, மாவட்ட அவைத்தலைவர், முன்னாள் எம்.எல்.ஏ., இரா.ஜெயராமகிருஷ்ணன், கழக பொறியாளர் அணி துணை செயலாளர், முன்னாள் எம்.பி., கு.சண்முகசுந்தரம் உள்பட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முட நீக்கியல் சங்கம் சார்பில் பெண்ணுரிமை காப்போம் வன்கொடுமையை தடுப்போம் போதை ஒழிப்போம் புதிய பாதை வகுப்போம் என்பதனை வலியுறுத்தி மினி மாரத்தான் போட்டி நடைபெற்றது. போட்டியை கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ. அய்யப்பன் எம்.எல்.ஏ , புதுச்சேரி போக்குவரத்து போலீஸ் எஸ்.எஸ்.பி பிரவீன் குமார் திரிபாதி ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மினி மாரத்தான் போட்டியை கொடியசைத்து தொடங்கி வைத்தனர். அப்போது முட நீக்கியல் சங்க நிர்வாகிகள் டாக்டர்கள் பாண்டியன், நடராஜன், சி.ஜெ. ரவி, நீலகிருஷ்ணன், பிரவீன் அய்யப்பன், பாரதி செல்வன் மற்றும் கூட்டுறவு சங்கத் தலைவர் ஆதி பெருமாள் அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சுதாகர், ராம்குமார், ராஜேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

நீதிபதிகள் நியமனத்தில்

இடஒதுக்கீடு முறையை பின்பற்ற வேண்டும்!

மாநிலங்களவையில் – பி.வில்சன் தனி நபர் மசோதா தாக்கல்!

புதுடெல்லி, பிப்.11-

பட்டியல் சாதியினர், பழங்குடியினர், பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பெண்கள், மதச் சிறுபான்மை யினர் ஆகிய வகுப்பினருக்கு அவர்களின் மக்கள்தொகை விகிகத்திற்கு ஏற்ப இந்திய உச்சநீதிமன்றத்திலும், உயர்நீதிமன்றங்களிலும் நீதிபதிகளை நியமிக்கும் வகையிலும், நீதித்துறை நியமனங்களில் மாநில அரசின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளும் வகையிலும் அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று தனி நபர் மசோதாவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன் (07.02.2025) அன்று மாநிலங்களவையில் தாக்கல் செய்தார்.

உச்சநீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பது குறித்த அரசியலமைப்புச் சட்டத்தின் 124 ஆவது பிரிவைத் திருத்தி 2(B), 2(C), 2(D), 2(E) ஆகிய புதிய உட்பிரிவுகளைப் புதிதாகச் சேர்க்குமாறு இம்மசோதாவில் கூறப்பட்டுள்ளது. அதேபோல் உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பது குறித்த அரசியலமைப்புச் சட்டத்தின் 217 ஆவது பிரிவைத் திருத்தி 2(A), 2(B), 2(C), 2(D), ஆகிய புதிய உட்பிரிவுகளைப் புதிதாகச் சேர்க்குமாறு இம்மசோதாவில் கூறப்பட்டுள்ளது. அதேபோல் உயர்நீதிமன்றத்திற்குக் கூடுதல், பொறுப்பு நீதிபதிகளை நியமிப்பது குறித்த அரசியலமைப்புச் சட்டத்தின் 224 ஆவது பிரிவைத் திருத்தி 1(A) எனும் புதிய உட்பிரிவைப் புதிதாகச் சேர்க்குமாறு இம்மசோதாவில் கூறப்பட்டுள்ளது.

சட்ட மசோதாவிற்கான நோக்கங்களும் காரணங்களும்

பல கலாச்சாரங்கள், மதங்கள், சமூகங்கள், பாலினங்கள் ஆகியவற்றின் கலவையாகத் திகழும் செழுமையான பன்முகத்தன்மை கொண்ட நாடு இந்தியா. நமது அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரை அனைவருக்கும் சமூக நீதியை உறுதி செய்கிறது. இருப்பினும், தற்போதைய உயர்நீதித் துறை அமைப்பில் பன்முகத் தன்மை இல்லை. தற்போதைய நீதித்துறை நியமனங்களில் சமூகரீதியாக பிற்படுத்தப்பட்ட குழுக்கள் புறக்கணிக்கப்பட்டு, சில பிரிவுகள் அதிகப்படியான பிரதிநிதித்துவம் பெறுகின்றன. ஆகையால் உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் பன்முகத்தன்மை இல்லை. அது, சமத்துவமின்மைக்கு இட்டுச்செல்கிறது.

பொதுமக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கு நீதித்துறையில் அனைவருக்கும் பிரதிநிதித்துவம் தருவது முக்கியமானது. அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய நீதித்துறை மீது பொதுமக்களுக்கு கூடுதல் நம்பிக்கை ஏற்படுகிறது. தங்கள் தரப்பு உண்மைகளையும் பிரச்சினைகளையும் நீதித் துறை புரிந்து கொள்ளும் என்று பொதுமக்கள் நம்பவேண்டுமானால் நீதித்துறையில் அனைவருக்கும் பிரதிநிதித்துவம் வழங்குவது இன்றியமையாதது. நீதி மன்ற அமைப்பு பாரபட்சமற்றதாகவும் அணுகக்கூடியதாகவும் இருக்கிறதென் பொதுமக்கள் உணர வேண்டும். மேலும் நீதித்துறை எடுக்கும் முடிவுகளின் தரத்தை உயர்த்துவது அவசியம். அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய நீதிபதிகள் தங்கள் தனிப்பட்ட பன்முகத் தன்மை கொண்ட வாழ்க்கை அனுபவங்களை நீதித்துறைக்கு கொண்டுவருவர்.

பல்வேறு சமூகப் பின்னணியில் இருந்து நீதிபதிகள் வேறுபட்ட அனுபவங்களைப் பெற்றிருப்பர். இதன் விளைவாக நீதித்துறைத் தீர்ப்புகள் சீரானதாகவும், மிகச் சரியானதாகவும் இருக்கும். பல்வேறு வகுப்பினரை உள்ளடக்கிய நீதித்துறை இருக்குமாயின் குறைவான பிரதிநிதித்துவம் பெற்ற வகுப்புகளின் உரிமை மீறல் தடுக்கப்படும், பாகுபாட்டைத் தடுக்கவும் அதிகவாய்ப்புள்ளது. வரலாற்று ரீதியாக ஒடுக்கப்பட்ட சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்த நீதிபதிகள் நியமனத்தில் உள்ள பற்றாக்குறை அவர்களுக்குள்ள அமைப்புத் தடைகளைச் சுட்டிக்காட்டுகிறது. அத்தடைகள் தீர்க்கப்பட வேண்டும். சமூகத்தின் அனைத்துத் தரப்பையும் உள்ளடக்கத் தவறும் நீதித்துறையினால் பொதுமக்களின் நம்பிக்கையைப் பெற இயலாது.

நீதித்துறையில் அதிகரிக்கும் பன்முகத்தன்மை அனைத்துக் குடிமக்களின் உரிமைகளையும் பாதுகாக்கும், நாட்டின் பன்மைத்துவ சமூகத்தையும் பிரதிபலிக்கும். ஆகவே நீதித்துறையில் பன்முகத் தன்மையை நிலைநாட்டும் அரசியலமைப்புச் சட்டம் நீதி மன்றங்களில் அனைத்துத் தரப்பு பிரதிநிதித்துவத்தையும் உறுதிசெய்யும். எனவே உயர் நீதித்துறையில் பன்முகப் பிரதிநிதித்துவத்தை அரசியலமைப்பு மூலம் பாதுகாப்பது மிக முக்கியமானது.

உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமனம் செய்யும் கொலீஜியம் அமைப்பு மூடுமந்திரம் போன்றது. அதை மாற்றி வெளிப்படையான நீதிபதி நியமனமுறையைச் செயல்படுத்தினால் நீதித்துறை மக்களின் நம்பிக்கையைப் பெற இயலும். மேலும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்த, கொலிஜியம் அமைப்பு நீதிபதி நியமனப் பரிந்துரைகளின் போது, அந்தந்த மாநில அரசுகளின் கருத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் சட்டரீதியாகவும் ஜனநாயக ரீதியாகவும் இயற்றியச் சட்டங்களைச் சோதிக்கும் அதிகாரம் நீதிமன்றங்களுக்கு உள்ளன. எனவே அத்தகைய நீதிமன்றங்களுக்கு நீதிபதிகளை நியமிக்கும் முன் மாநில அரசுகளின் கருத்துக்களையும் கேட்க வேண்டும். கூட்டாட்சியின் உணர்வில் செயல்படும் இந்திய அரசியலமைப்பிம் மாநில அரசுகளும், ஒன்றிய அரசும் சமமானவை. எனவே நீதிபதிகளை நியமிப்பதில் ஒன்றிய அரசின் கருத்தை மட்டும் கேட்பது சரியன்று. மாநில அரசுகளின் கருத்துக்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும்,

இவை உள்ளிட்ட பல்வேறு காரணங்களையும் நோக்கங்களையும் முன்வைத்து மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன் தனிநபர் மசோதாவை தாக்கல் செய்தார். இச்சட்ட மசோதா செயலுக்கு வருமாயின் இந்திய நீதித்துறை வரலாற்றில் புதிய தொடக்கம் பிறக்கும்.

நீலகிரி மாவட்ட திமுக சார்பில் கோதகிரியில் கண்டன பொதுக்கூட்டம் ஒன்றிய மார்க்கெட் திடலில் தேர்தல் பணி செயலாளர், அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் முன்னிலையில் மாவட்ட கழக செயலாளர் பா.மு.முபாரக் தலைமையில் நடைபெற்றது. நெல்லைகண்ணன் வரவேற்றார். கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர்கள் கந்திலிகரிகாலன், ஒப்பிலாமணி, ஜே.வீரமணி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.